தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 10 இதழ் : 8 ஜூன் 2014



**உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்.** ஏசாயா 54:13

நம்மால் ஜெபித்துத் தாங்கப்பட்டு, வேத அறிவிலும் கல்வியிலும் முன்னேறிவரும் நமது பீல் ஆதிவாசி பிள்ளைகள்

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

சுதேச ஊழியரின் சாட்சி

## போதகர். ஏலம் டோடியார்

### கொட்டாரா, இராஜஸ்தான்



இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் ஏலம் டோடியார். நான் இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் அமைந்துள்ள கொட்டாரா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் எனது 25–வது வயது வரை மனம் போன போக்கில் வாழ்ந்து, சாராயம் குடித்து, கெட்ட நண்பர்களின் மூலம் தவறான பாதையில் நடந்தேன். இதனால் எனது வாழ்வில் எவ்வித சந்தோஷமும், சமாதானமும் இல்லை. 1998–ம் வருடத்தில் ஒரு நாள், ஷாலோம் ஊழியர் சகோ. பாதர் பாரியா என்பவர் எங்கள் கிராமத்திற்கு வந்து, இயேசு கிறிஸ்துவைப் பற்றி எங்களுக்கு அறிவித்தார். அந்த கூட்டத்தில் நானும் பங்கு பெற்று, இயேசுவைப் பற்றி அறிந்து கொண்டேன். அங்கு அவர் பேசிய வார்த்தையினிமித்தம், நான் பாவ உணர்வடைந்து மனதில் குத்தப்பட்டு, பாவ அறிக்கை செய்து, இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். தொடர்ந்து கூட்டங்களில் பங்கு பெற்று விசுவாசத்தில் வளர்ந்து வந்தேன்.

ஒரு நாள் தேவன் என்னை ஊழியத்திற்கென்று அழைத்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பினார். பின்பு நான் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 15 நாட்கள் உபவாசமிருந்து ஜெபித்தேன். அந்த நேரத்தில் ஒரு தரிசனத்தின் மூலம் வானத்திலிருந்து தேவன் இறங்கி வந்து, நீ என்னுடையவன், நீ என்னைப் போல பாடனுபவித்து ஊழியம் செய் என்று என்னோடே பேசினார். அந்த அழைப்பிற்கு நான் என்னை முற்றிலுமாக அர்ப்பணித்து எனது வீட்டில் கூட்டம் நடத்த ஆரம்பித்தேன். பின்பு ஷாலோம் ஊழியத்தில் I.C.T. பயிற்சி 2 வருடம் எடுத்து வேத அறிவைப் பெற்றேன். அதன் பின், எனது பகுதியிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் அலைந்து திரிந்து, இயேசுவைப் பற்றி கூறி அந்த பகுதியிலும், பிரதாப்கட் பகுதியிலும் 20 சபைகளை நிறுவவும், 20 ஊழியர்களை உருவாக்கவும் தேவன் கிருபை செய்துள்ளார். அதன் பின் B.Th., படித்து முடித்து போதகராக அபிஷேகம் பண்ணப்பட்டு, தற்போது கொட்டாரா ஷாலோம் ஆலயத்தின் போதகராக ஊழியம் செய்து வருகிறேன். 32 குடும்பங்கள் சபையின் உறுப்பினர்களாக இருந்து தேவனை ஆராதித்து வருகின்றனர்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **All Saints Church,** Madurai.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## உங்கள் சகோதரனிடமிருந்து



*கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,*

ஆண்டவரும் இரட்சகருமான இயேசுகிறிஸதுவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள்.

தேவ கிருபையாலும் உங்கள் அனைவரின் ஜெபங்களினாலும் தியாகமான ஆதரவுகளினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. மே மாதத்தில் குறிப்பாக 600க்கும் அதிகமான சபைகளில் 10 நாட்கள் CBC சிறுவர் வேதாகம பள்ளி "ஜெபமே ஜெயம்" என்ற தலைப்பில் மிக ஆசீர்வாதமாக நடைபெற்று 35,000க்கும் அதிகமான ஆதிவாசி மாணவர்கள் ஆசீர்வாதம் பெற்றார்கள். இந்த சிறுவர் ஊழியத்திற்காக ஜெபித்து தாங்கிய உங்கள் யாவருக்கும் எங்கள் நன்றியை கூறுகிறோம்.

நம் பாரத தேசத்திலே நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தல் மூலமாக தேவன் புதிய மாற்றத்தை கொண்டு வந்துள்ளார். அனைத்து திருச்சபைகளும், தேவ ஜனங்களுமாக நாம் கருத்தாக பாரத்துடன் ஜெபித்தோம். ஆகவே தேவன் தாமே நம் பாரத தேசத்தில் நல்லாட்சியை தரவும் தேவ சமாதானம் நிலவ, தேவ சபைகளும் ஊழியங்களும் தடையன்றி வளரவும் தொடர்ந்து ஜெபிக்க நாம் கடமை பட்டுள்ளோம். "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது "(மத் 25: 28) என்று சொன்ன இயேசு கிறிஸ்து தாமே "உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்"(மத்:28:20) என்று வாக்கு தந்த படியால் நமக்கு தந்த அழைப்பில் முன்னேறி கடந்து செல்வோம்.

இந்த ஜுன் மாதத்தில் நாம் தாங்கிவரும் 1050க்கும் மேற்பட்ட பீல் ஆதிவாசி மாணவர்களின் கல்விப் பணித் தேவைகளுக்காக ஜெபியுங்கள். ஒரு மாணவருக்கு சராசரியாக ரூ. 1000–ம் தேவைப்படுகிறது. அவர்களுக்கு சீருடை நோட்டுபுத்தகங்கள் பேக்குகள் போன்றவை கொடுக்கப்பட வேண்டும். உங்கள் குடும்பத்தின் சார்பில் ஒன்றோ அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தயவாக உதவ முன்வாருங்கள். தேவன் உங்கள் சந்ததியை ஆசீர்வதிப்பார். **"ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்" (நீதி: 19 : 17).** மேலும் குஜராத்தில் நடைபெறும் School, Hostel மற்றும் முன்னேற்ற திட்டப் பணிகள், பணித்ததள அலுவலக பணிகள் யாவற்றையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள். நாங்கள் உங்கள் யாவருக்காகவும் அனுதினமும் ஜெபித்து வருகிறோம்.

**"உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். "** (ஏசாயா 44 : 3) என்ற வசனத்தின்படி கர்த்தர் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் V. தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

# நம் சந்ததியை ஆசீர்வதிக்கும் தேவன்



சிறப்புச் செய்தி : பேராயர். **V. தேவதாஸ்**

நம் சர்வ வல்லமையுள்ள தேவன் நம்முடைய சந்ததியை ஆசீர்வதிக்கும் தேவன். ஆதியிலே தேவன் ஆதாம், ஏவாளை படைத்து ஆசீர்வதித்து பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று உரைத்தார். ஆதி: 1: 28 நோவாவின் குடும்பத்தையும் தேவன் அப்படியே ஆசீர்வதித்து பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள் என்று கூறினார். (ஆதி: 9:1) அதை தொடர்ந்து ஆபிரகாம் ஒருவனாயிருக்கையில் அவனை அழைத்து அவனை ஆசீர்வதித்து அவனை பெருகப்பண்ணினார். (ஏசாயா: 51:2) வேதத்தில் தேவன் தம்மை ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களின் தேவனுமாயிருக்கிறேன். (யாத்: 3:6) என்று தம்மை வெளிப்படுத்தி நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள் நான் உங்கள் தேவனாயிருப்பேன். ஏரேமியா 30:22 ல் தேவன் வாக்கு பண்ணியிருக்கிறார். எவ்வளவாக நம்மையும், நம் சந்ததியையும் ஆசீர்வதிக்கிற தேவனாக இருக்கிறார்.

முதலாவதாக தேவன் கர்ப்பத்தின் கனியை நமக்குத் தந்து நம்மை ஆசீர்வதிக்கிற தேவனாக இருக்கிறார். **ஆபிரகாம், ஈசாக்கு, அன்னாள்** இவர்கள் தேவனிடத்தில் வேண்டிக்கொண்ட போது தேவன் அவர்களை நினைத்தருளி, அவர்களுக்குப் புத்திர பாக்கியத்தையும் தந்தார். சங்கீதக்காரன் சொல்கிறான் : **"என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது".** (சங்கீதம்: 139: 16) மேலும் என் **"தாயின் கர்ப்பத்தில் என்னை காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்ட படியால் உம்மைத் துதிப்பேன்"** (சங்கீதம் 139: 13, 14)—ல் என்று உணர்ந்து எழுதியுள்ளார்.

எரேமியா 1:5—ல் தேவன் கூறுகிறார் : **"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கத்தரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்".** அவர் நம்மை அறிந்த தேவன், பரிசுத்தப்படுத்துகிற தேவன், தெரிந்து கொள்கிற தேவனாகவும் நம்மை ஜாதிகளுக்கு ஆசீர்வாதமாக வைக்கிற தேவனாகவும் இருக்கிறார்.

மட்டுமன்றி பராமரித்து போஷிக்கிற தேவனாகவும் இருக்கிறார். ஆதியாகமம் 21—ம் அதிகாரத்தில் அடிமைப் பெண் ஆகாருக்கு ஆபிரகாம் மூலமாக கொடுக்கப்பட்ட இஸ்மவேல் வனாந்தரத்தில் பசியுடனும், தாகத்துடனும் கதறி அழுத போது **"தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்"** என ஆதி 21 : 17 —ல் காண்கிறோம். நம் தேவன் கரிசனையோடு நமது தேவைகளை சந்திக்கிற தேவனாக நம் சந்ததியையும், கர்ப்பத்தின் கனிகளையும் ஆசீர்வதிக்கிறார்.

நமது ஆண்டவராகிய **இயேசு கிறிஸ்துவும்** சிறுபிள்ளைகளை அதாவது நம் சந்ததியை குறித்து எவ்வளவு அழகாக கூறியுள்ளார் என்பதை மத்தேயு 18 ஆம் அதிகாரத்தில் கவனித்துப் பாருங்கள். சீஷர்கள் தங்களில் யார் பரலோக ராஜ்யத்தில் பெரியவனாகயிருப்பான் என்று கேட்ட கேள்விக்கு இயேசு கிறிஸ்து மத்18: 2–14 வரை உள்ள வசனங்களில் சொல்வதை தியானித்து பாருங்கள்.

**முதலாவது** இயேசு சிறுபிள்ளைகளை பார்த்து சீஷர்களிடம் சொன்னது மனந்திரும்பி சிறு பிள்ளைகளைப் போல ஆகாவிட்டால் என்று கூறுகிறார். சிறு பிள்ளைககளை தேவன் பரிசுத்தமான சந்ததியாகப் பார்க்கிறார். சிறு பிள்ளைகளை தேவன் ஏற்றுக் கொண்டு, அவர்களை தம் பக்கமாக இழுத்து ஆசீர்வதிக்கிறார். பக்தியுள்ள சந்ததியை பெற்றெடுக்கவே தேவன் இல்லறவாழ்வை தந்துள்ளார். தேவன் சந்ததியை ஆசீர்வதிக்கும்படியாக ஏரேமியாவைப் போல் தாயின் கர்பத்தில் இருக்கும் போதே பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தராக இருக்கிறார். யோவான் ஸ்நானகனை போல் கர்ப்பத்தில் இருக்கும் போதே பரிசுத்தப்படுத்தி, பரிசுத்த ஆவியினால் நிரப்புகிற தேவனாயிருக்கிறார். **“...உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்”** (ஏசா. 44 : 3) என்ற தேவன் நம் பிள்ளைகளையும் நம் சந்ததியையும் அப்படியே ஆசீர்வதிப்பார்.

**இரண்டாவது** மத். 18: 4–ல் **“இந்த பிள்ளையை போலத் தன்னை தாழ்த்துகிறவன் எவனோ”** என்று சிறு பிள்ளைகளைக் குறித்து அழகாகக் கூறியுள்ளார். பிள்ளைகள் உள்ளத்தில் பெருமை, கள்ளங்கபடு காணப்படாத தாழ்மையான இருதயம் உள்ளவர்கள் என்று இயேசு கூறியுள்ளார். ஆனால் பெரியவர்களாக மாறும்போது நம் இதயத்தில் பெருமை, இச்சை இன்பங்கள் பெருகுகிறது. தேவன் தாழ்மையுள்ளவர்களை உயர்த்துகிறார். நம் சந்ததியை தாழ்மையுள்ள சந்ததியாகப் பார்க்கிறார். சிறுவன் சாமுவேலைப் போல தேவ ஊழியத்தை தாழ்மையாக உண்மையாக நிறைவேற்றினபோது தேவன் சிறுவன் சாமுவேலை பெயர் சொல்லி அழைத்துப் பேசினார். தேவன் தம் இருதயத்திலுள்ள பாரங்களையெல்லாம் சாமுவேலிடம் கூறினார். **“தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை”** என்ற வார்த்தையின்படி சிறு பிள்ளைகளைப் போல் தேவன் எதிர்பார்க்கும் தாழ்மையை தேவன் தாமே நமக்குத் தருவாராக!

**மூன்றாவதாக** மத்தேயு 18:6 ல் இயேசு கூறுகிறார் : **“என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்த சிறியரில் ஒருவனுக்கு”** என்று பிள்ளைகளின் விசுவாசத்தை எடுத்து உரைக்கிறார். சிறு பிள்ளைகளாகிய நம்முடைய சந்ததியை விசுவாச சந்ததியாக பார்க்கிறார். அவர்பேரில் பிள்ளைகளின் விசுவாசத்தை எதிர்பார்க்கிறார். பிள்ளைகள் தாய், தகப்பனிடத்தில் விசுவாசம் வைத்து வாழ்வதைப் போல் தம்மிடத்திலும் அவர்களின் விசுவாசத்தை எதிர்ப்பார்க்கிறார். நம் சந்ததியான நம் பிள்ளைகளை ஆபிரகாமின் சந்ததியாக விசுவாச மார்க்கத்தின் பிள்ளைகளாகக் காண்கிறார். **“விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்– தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்”.** கலா. 3 : 7,20 – ன்படி ஆபிரகாமின் ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கும் சந்ததியாக இயேசு கிறிஸ்துவுக்குள் பெற்றுக் கொள்வோம்.

அடுத்தபடியாக இயேசு கிறிஸ்து சிறு பிள்ளைகள் மீது எவ்வளவு கவனம் செலுத்துகிறார் என்பதையும் அக்கறை கொண்டு பாதுகாக்கிறார் என்பதையும் மத். 18: 5–14 வரை வாசித்து அறிந்து கொள்ளலாம். மத் 18 6–ல் **"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்".** தேவன் சிறுபிள்ளைகளை எவ்வளவு விசாரிக்கிறவராயிருக்கிறார். சிறு பிள்ளைகளுக்கு இடறல் கொண்டுவருகிறவர்களுக்கு உண்டான தண்டனை எவ்வளவு பயங்கரமாக உள்ளது. சிறுபிள்ளைகளை தவறாக நடத்தும் போதும்; தவறானவைகளை போதிக்கும் போதும், அவர்கள் வாழ்க்கையை கெடுக்க முன்வரும் போதும் தேவ கோபாக்கினை வெளிப்படுகிறது. தேவன் நம் பிள்ளைகளுக்காக எவ்வளவாக வைராக்கியமாக இருக்கிறார். நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்யும்போதும், கர்த்தருக்காக வாழும்போதும் தேவன் நம் பிள்ளைகளை பாதுகாக்கிறார்.

**இரண்டாவதாக** மத். 18 : 10ல் **"இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்: அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"** என்று இயேசு கூறினார். தேவன் நம் ஒவ்வொரு பிள்ளைகளுக்காக ஒவ்வொரு தேவதூதனை கட்டளையிட்டிருக்கிறார். அவர்களை பராமரிக்க, பாதுகாக்க தேவன் வைத்துள்ளார். நம் வீட்டில் உள்ள பெரியவர்கள் சொல்ல நான் கேட்டதுண்டு. பிறந்த பிள்ளைகள் தூங்கும்போது சிரிப்பார்கள் அப்போது தேவதூதன் மலர்களை கொடுத்து விளையாடுகிறான் என்று சொல்வார்கள். அந்த பூக்களை மறுபடி தூதன் எடுக்கும் போது பிள்ளைகள் சினுங்கி அழுவார்கள் என்று சொல்வார்கள்.

மேலும் சில படங்களில் நான் பார்த்ததுண்டு, சிறுபிள்ளைகள் பாலத்தின் மீது நடந்து போகும் போது தேவதூதர்கள் பின்னாக அவர்களை காப்பது போலிருக்கும். அவைகள் எல்லாம் கற்பனை அல்ல. இயேசு சொன்னபடி தேவதூதர்களை நம் பிள்ளைகளுக்காக தேவன் வைத்துள்ளார். எந்த தீங்கும் பிள்ளைகளை தொடராதபடியும் பாதங்கள் கல்லில் இடறாதபடியும் பிசாசின் காரியங்கள் அனைத்திற்கும் விலக்கிக் காக்கும்படியாக தேவன் தந்த தேவதூதர்களுக்காக தேவனை துதிப்போம்.

**மூன்றாவதாக** மத். 18 : 14 ல் இயேசு கூறுகிறார் : **"...இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல".** நம்முடைய பிள்ளைகளாகிய நம்முடைய சந்ததி இரட்சிக்கப்படவேண்டும், பரலோக ராஜ்யத்தின் புத்திரராய் மாற வேண்டும் என்பது தேவ சித்தம். இதை வாசிக்கிற அன்பு பெற்றோரே, உங்கள் கண்ணீர் ஜெபத்தை தேவன் கேட்கிறார். நம் சந்ததியின் ஒரு பிள்ளை கூடக் கெட்டுபோவது அவருடைய சித்தமல்ல. **"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்"** (ஏசா. 43 : 21) என்று திருவுளம் பற்றியுள்ளார்.

இறுதியாக மத். 18 : 5ல் **“இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்”**. என கிறிஸ்து கூறுகிறார். ஒவ்வொரு சிறு பிள்ளைகளின் ஆத்துமாக்களை தேவன் நேசிக்கிறார். குறிப்பாக ஏழை எளிய பிள்ளைகள், திக்கற்ற பிள்ளைகள், ஆதிவாசி பிள்ளைகள் போன்ற இவர்கள் மீது தேவன் அக்கரைக் கொண்டவர். இப்படிப்பட்ட பிள்ளைகளை நாம் ஏற்றுக் கொள்ளுகிறபோது அப்படிப்பட்டவர்கள் என்னையே ஏற்றுக்கொள்கிறார்கள் என்று இயேசு சொல்கிறார்.

நாம் பீல் ஆதிவாசி பிள்ளைகளை மாதம் ரூ. 600 கொடுத்து தொடர்ந்து தாங்கிவருகிறோம். அப்படிப்பட்ட 1080 பிள்ளைகளில் சுமார் 100க்கும் அதிகமான பிள்ளைகள் +2 முடித்து Teacher, Nursing, Diplamo Computer Courses படித்து முன்னேறுகிறார்கள். குஜராத்தில் சிமளியா என்ற கிராமத்தைச் சேர்ந்த **சகோ. தேர்சிங் பாய்** என்பவரின் மகளான **சோனல்** என்கிற சிறுபிள்ளையை +2 வரை படிக்க வைத்து, பின்னர் 3 ஆண்டுகள் Nursing course பண்ண Shalom ஊழியத்தின் மூலம் உதவி செய்தோம். அந்த மகளுக்காக ஒரு குடும்பத்தினர் அன்புடன் உதவினார்கள். இன்று Nursing course முடித்து வேலைக்குச் சேர்ந்து முதல் மாத வருமானத்தைக் ஷாலோம் ஊழியத்திற்கு காணிக்கையாக கொடுத்தது மட்டுமல்லாமல் **சோனல்** ஆண்டவருக்கு சாட்சியாக, நன்றியுள்ள மகளாக விளங்குகிறாள். மேலும் தன்னை 15 ஆண்டுகளாக படிப்பதற்கு ஜெபித்து தாங்கிய குடும்பத்தையும், Shalom ஊழியத்தையும் தேவன் ஆசீர்வதிக்க கண்ணீருடன் ஜெபித்து நன்றி கூறினாள்.

**“இந்த சிறியரில் ஒருவனுக்கு எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்”** என்று இயேசு சொன்னார். நாமும் நம்மை சுற்றி வாழும் தேவையுள்ள பிள்ளைகளுக்காக ஜெபிப்போம் இயன்ற உதவிகளைச் செய்வோம். **“இயேசுவுக்காக செய்தோம்”** என மனமகிழ்சியடைவோம். அப்போது தேவன் நம் சந்ததியை ஆசீர்வதிப்பார். **“உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்”** (ஏசா. 54 : 13) என்ற வாக்குத்தத்தத்தை தேவன் நம் வாழ்வில் நிறைவேற்றுவார். அல்லேலூயா!

## *முகவரி மாற்றங்களைத் தெரியப்படுத்துங்கள்*

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாகத் தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும்.

மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குக் கிடைத்தவுடன் உங்களுக்கு SMS மூலம் செய்தி தெரிவிக்கப்படும்.



# CBC இயக்குநர் மற்றும் ஆசிரியர் பயிற்சி

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்து ஏப்ரல் மாதத்தில் ஷாலோம் சிறுவர் வேதாகமப் பள்ளி இயக்குநர் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி முகாம் நடைபெற்றது. மத்தியப்பிரதேசத்தில் 22&23 தேதிகளிலும், குஜராத் மாநிலத்தில் 28&29 தேதிகளிலும் மற்றும் இராஜஸ்தான் மாநிலத்தில் செவனியா என்ற இடத்திலுள்ள CNI ஆலயத்தில் வைத்து மே மாதம் 2&3 தேதிகளிலும் முகாம்கள் நடைபெற்றன. இப்பயிற்சி முகாம்களில் மத்தியப்பிரதேசத்தில் 522 பேரும், குஜராத்தில் 219 பேரும், இராஜஸ்தானில் 369 பேரும் ஆக மொத்தம் 1110 பேர் பங்கு பெற்றனர். நமது ஷாலோம் ஊழியர்கள் இயக்குநர்களாகவும், CBC ஆசிரியர்கள் மற்றும் ஞாயிறு பள்ளி ஆசிரியர்களும் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

**“ஜெபமே ஜெயம்”** என்ற தலைப்பில் இந்த ஆண்டு CBC பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு பயிற்சி முகாமும் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. துதி மற்றும் ஆராதனை வேளையை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும் **சகோ. ஃபிராங்க்ளின்** அவர்களும் நடத்தினார்கள். தேவ பிரசன்னம் அளவில்லாமல் இறங்கி வந்தது. செய்திவேளையில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் எதற்காக சிறுபிள்ளைகளுக்கு அதிக முக்கியத்தும் நாம் கொடுக்க வேண்டும் என சிறுவர்களைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறிய காரியங்களை மையமாக வைத்துப் பேசினார்கள். செய்தியின் மூலம் அநேகர் தொடப்பட்டு எதற்கு சிறுவர் ஊழியத்தை செய்ய வேண்டும் என்பதை நன்கு அறிந்ததோடு, ஜெப வேளையில் ஊற்சாகமாய் அந்த ஊழியத்தை நிறைவேற்ற தங்களை அர்ப்பணித்தார்கள். இராஜஸ்தானில் நடைபெற்ற பயிற்சியில் **பேராயர் தேவதாஸ்** அவர்கள் சிறப்புச் செய்தியளித்தார்கள். இதில் சிறுவர் ஊழியத்தின் முக்கியத்துவத்தை செய்தியின் போது பகிர்ந்து கொண்டார்கள். செய்தியின் மூலம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டனர். மதிய உணவிற்குப் பிறது அனைவருக்கும் Action Songs கற்றுக் கொடுக்கப்பட்டது. 10 நாட்களுக்குரிய தலைப்புகளில் 10 பாடல்களும், கருத்துப்பாடலும் செய்கையுடன் கற்றுக் கொடுக்கப்பட்டது. செய்கை பாடல்களை நமது அலுவலக ஊழியர்களின் பிள்ளைகள் ஒரு குழுவாக உற்சாகமாய் கற்றுக் கொடுத்தனர். அதன்பின் 10 நாட்களுக்குரிய தலைப்புகளான **1) ஜெபத்தின் மூலம் ஆசீர்வாதம், 2) ஜெபத்தின் மூலம் மழை, 3) ஜெபத்தின் முலம் இரட்டிப்பான ஆசீர்வாதம், 4) ஜெபத்தின் மூலம் ஜீவன், 5) ஜெபத்தின் மூலம் பாதுகாப்பு, 6) ஜெபத்தின் மூலம் அற்புதம், 7) ஜெபத்தின் மூலம் விடுதலை, 8) ஜெபத்தின் முலம் அனுதின வாழ்வில் வெற்றி, 9) ஜெபத்தின் மூலம் பரிசுத்த ஆவியானர், 10) ஜெபத்தின் முலம் பரலோகம் –** என 10 நாட்களுக்குரிய

பாடங்கள் எவ்வாறு பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பது என்று பயிற்சியளிக்கப்பட்டது. இந்த பகுதியை ஷாலோம் பயிற்சிக் குழு ஊழியர்கள் பொறுப்பேற்று நடத்தினார்கள். பொருட்கள் மூலம் எப்படி சொல்லிக் கொடுப்பது என்பது பற்றி **சகோ. பாவ்சிங் கட்டாரா** அவர்களும், வரைபடங்கள் வைத்து எப்படி சொல்லிக் கொடுப்பது என்பதை **Pr. விக்காஸ் கராசியா** அவர்களும், பல குரல்களை வைத்துப் பேசி எப்படி சொல்லிக் கொடுப்பது என்பதை **சகோ. அனில் சௌகான்** அவர்களும் கற்றுக் கொடுத்தனர்.

இடையிடையே 10 நாட்களுக்குரிய பாடங்களிலுள்ள வேதாகம கதைகளைக் குறு நாடகங்களாக நடத்திக் காட்டப்பட்டன. பார்த்த அனைவரும் ஜெபத்தின் மேன்மையை அறிந்து கொண்டார்கள். அதோடு முதல் நாள் பயிற்சி நிறைவு பெற்றது. மறுநாள் ஜெபம் மற்றும் துதி ஆராதனையோடு பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின் செய்கை பாடல்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது. அதன்பின் CBC எப்படி நடத்துவது, மனப்பாட வசனம் எப்படிக் கற்றுக் கொடுப்பது என்பதைக் குறித்து குழுக் கலந்தாய்வுகள் நடைபெற்றன. அதன்பின் இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்த **"பரமண்டல..."** ஜெபத்தைக் குறித்து Choreography நமது ஷாலோம் பணித்தள அலுவலக ஊழியர்கள் மூலம் நடத்தப்பட்டது மிகவும் அருமையாக இருந்தது.

அதனைத் தொடர்ந்து இயேசுவின் வருகைக்காக நாம் ஜெபித்து ஆயத்தமாயிருக்க வேண்டும் என்பதைக் குறித்து வேதத்திலிருந்து 10 கன்னிகைகளின் உவமையை நாடகமாக நடத்திக் காட்டினார்கள். அதைப் பார்த்தவர்கள் நிச்சயமாக இயேசு கிறிஸ்துவின் இராஜ்ஜியத்திற்குச் செல்ல ஜெபத்துடன் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்கள். இந்த பயிற்சி முகாம்களில் பொம்மலாட்டம் நடத்தப்பட்டது. இறுதியாக இந்தப் பயிற்சி நிறைவு பெற்றது. அனைவரும் CBC சிறுவர் ஊழியத்தின் மூலம் சிறுவர்களை இயேசுவண்டை நடத்த வேண்டும் என்ற பாரத்துடன் திரும்பிச் சென்றனர். இந்த 6 நாட்களும் பயிற்சியில் பங்கு பெற்ற அனைவருக்கும் உணவு மற்றும் உறைவிடம் வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு CBC–க்காக 35000 பயிற்சி புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு, Poster / Picture / Chart, Song Books, CD & DVD அனைத்தும் ஷாலோம் சபைகளுக்கும் கொடுக்கப்பட்டன. இந்த பயிற்சியில் பங்கு பெற்ற அனைவரும் தங்கள் தங்கள் சபைகளில் CBC ஐ சிறப்பாக நடத்தினார்கள். இந்த பயிற்சியை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்கள். பீல் ஆதிவாசி சிறுவர்கள் இயேசுவை அறிய வேண்டும் என தேவன் அவர்களுக்குக் கொடுத்த தரிசனத்திற்காக தேவனைத் துதிக்கிறோம்.

---

**''இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.'' 1 தெச. 5 : 17,18**

---

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT



மாணவனின் பெயர் : **அர்பித் D. மெய்டா**

தந்தையின் பெயர் : தினேஷ் மெய்டா

தாயாரின் பெயர் : ரம்லி மெய்டா

பிறந்த நாள் : 15.04.2003

படிக்கும் வகுப்பு : 4th Std.

சொந்த ஊர் : நகாரி

மாவட்டம் & மாநிலம் : ஜாபுவா, மத்தியப்பிரதேசம்

### மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–

இவனுடைய தகப்பனார் இயேசுவை அறியாததற்கு முன்பு சாராயம், பீடி, விக்கிரக ஆராதனை செய்வது போன்ற பாவங்களுக்கு அடிமையாக இருந்தார். இதினிமித்தம் வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டார். இவரது மனைவிக்கு நெஞ்சு வலி அதிகமாக இருந்தது. கை கால்களிலும் மிகுந்த வலி இருந்தது. மந்திரம், மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. ஷாலோம் ஊழியர் தேரு மெய்டா ஜெபித்த போது, உடனே சுகம் கிடைத்தது. அதன் பின் குடும்பமாக இயேசுவை விசுவாசித்து சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். அதன் பின் ஊழியம் செய்ய வேண்டும் என்ற பாரம் ஏற்பட்டு, ஊழியத்திற்கென்று தன்னை அர்ப்பணித்து, 2012–ம் ஆண்டில் ஷாலோம் ஊழியப்பயிற்சி பெற்று, தற்போது தனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவனைக் குறித்து :–** அர்பித் நன்றாகப் படிப்பான். இவனுக்கு 1 சகோதரனும், 1 சகோதரியும் உண்டு.

**ஜெபியுங்கள் :–** இவனது படிப்பு, நல்ல சரீர சுகம் யாவற்றிற்காகவும் இவனது பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** **Mr. Stephen Gnanam, Chennai.**

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1056 மாணவர்களில் இன்னும் 252 **மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.

## ஷாலோம் ஊழியத்திற்கான உங்கள் பங்கினை இந்த வருடம் அனுப்பிவிட்டீர்களா?

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!**

உங்கள் கரங்களில் கிடைக்கும் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் ஆத்துமப் பாரத்துடன் வட இந்தியாவில் தேவன் தந்த தரிசனப் பணியான மிஷனெரிப் பணித்தளச் செய்திகளையும், தேவனுடைய வார்த்தைகளையும், ஜீவனுள்ள சாட்சிகளையும், மிஷனெரி வாழ்க்கை வரலாறுகளையும் மற்றும் ஆவியானவரால் கொடுக்கப்படும் காரியங்களையும் சுமந்து வருகிறது. இம்மலருக்காக அதிகமாக ஜெபித்து, உழைத்து, அநேகச் செலவுகளைச் செய்து அனுப்புகிறோம்.




இந்த தரிசனப்பணியை, தேவன் பேரில் கொண்ட அன்பின் நிமித்தமாக, தியாகத்துடனும், ஆத்துமப் பாரத்துடனும் மாதந்தோறும் / வருடந்தோறும் தாங்கி வரும் ஆதரவாளர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறேன். இப்படி ஜெபித்து, ஊழியங்களைத் தாங்கிவரும் ஆதரவாளர்கள் மாதந்தோறும் ஊழியங்களை அறிந்து தேவனைத் துதிக்கவும், மேலும் பாரத்துடன் ஜெபிக்கவும் இம்மலர் அனுப்பப்படுகிறது. ஆனால் அநேகர் இந்த ஊழியத்திற்காகவோ, இந்த பத்திரிக்கைகளுக்காகவோ வருடத்திற்கு ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லை.

பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் மிஷனெரி ஊழியங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணிக்காக, இம்மலரை வாசிக்கும் அன்பர்கள் **இந்த வருடத்தில் ஒரு முறை** கூட காணிக்கை அனுப்பவில்லையெனில், தயவாக உங்கள் அன்பின் பங்கினை ஜெபித்து அனுப்பி, ஊழியங்களைத் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லது குறைந்தது பத்திரிகை வருடச்சந்தா காணிக்கையான ரூ. **100/–** ஐ அனுப்ப வேண்டுகிறோம்.

அப்படியாக நீங்கள் வருடத்திற்கு ஒருமுறை, குறிப்பாக இந்த மே மாதத்திற்குள்ளாக காணிக்கை அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம். **"அப்படி நீங்கள் காணிக்கை அனுப்பாத பட்சத்தில், நிதி நெருக்கடியின் காரணத்தினால் எங்களால் தங்களுக்குத் தொடர்ந்து பத்திரிகை அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்".**

நீங்கள் அனுப்பும் தியாகமான காணிக்கைக்கையை நாங்கள் வரவேற்கிறோம், உங்கள் குடும்பத்தையும், சந்ததியையும் தொடர்ந்து தேவன் ஆசீர்வதிப்பாராக

– பேராயர். வே. தேவதாஸ்

**"... சுவிசேஷ விஷயத்தில் என்னோடுகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது". பிலி. 4:3.**




தேவனுடைய பெரிதான தயவினால் கடந்த மே மாதம் **8ம்** தேதி முதல் **18ம்** தேதி வரை குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களிலுமுள்ள **600க்கும்** அதிகமான ஷாலோம் சபைகளில் CBC – சிறுவர் வேதாகமப் பள்ளிகள் நடத்தப்பட்டன. இதில் அந்தர்வேலியா கிராமத்தில் முதலாவது CBC நிகழ்ச்சியினை மே 5 ஆம் தேதி **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஜெபித்துத் துவக்கி வைத்தார்கள். இந்த கிராமத்தில் **300க்கும்** அதிகமான மாணவர்கள் பங்குபெற்றனர். இந்த 10 நாட்களும் சபைகளிலுள்ள சிறுவர்களும் கிராமங்களிலுள்ள இயேசு கிறிஸ்துவை அறியாத சிறுவர்களும் உற்சாசத்துடன் பங்கு பெற்றனர். **"ஜெபமே ஜெயம்"** என்ற தலைப்பின் கீழ் இந்த 10 நாட்களும் பாடங்கள், வேதாகம கதைகள், பாடல்கள், குறு நாடகங்கள், மனப்பாட வசனங்கள் என அநேகக் காரியங்கள் சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டன.

அனைத்து சிறுவர்களும் உற்சாகத்துடன், பாடல்கள், கதைகள், வசனங்கள் அனைத்தும் குறிப்பாக ஜெபத்தின் முக்கியத்துவத்தையும் மேன்மையையும் கற்றுக் கொண்டார்கள். CBC யில் கலந்து கொண்ட அனைத்து சிறுவர்களுக்கும் தினமும் சிற்றுண்டி மற்றும் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன. இறுதி நாள் நிகழ்ச்சியில் 10 நாட்களுக்குரிய மனப்பாட வசனங்களைச் சரியாகச் சொன்ன பிள்ளைகளை



உற்சாகமூட்டும் வகையில் பரிசுகள் வழங்கப்பட்டன. குறிப்பாக மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியாவில் நடைபெற்ற CBC இறுதிநாள் நிகழ்ச்சியில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மற்றும் **Dr. Jolly Abel** அவர்களும் கலந்து கொண்டனர். இதில் **Dr. Jolly Abel** அவர்கள் ஜெபத்தைப் பற்றி சிறுவர்களுக்குச் செய்தியளித்தார்கள். இந்நிகழ்ச்சிகள் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்த CBC வகுப்புகளில் மொத்தம் **35,000க்கும்** அதிகமான பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டனர். இந்த 10 நாட்கள் நடைபெற்ற CBC –யின் மூலம் தேவன் சிறு பிள்ளைகள் மீது ஜெப ஆவியை அளவில்லாமல் ஊற்றியிருப்பதைக் காண முடிந்தது. அநேக சிறுவர்கள் அனுதினமும் ஜெபிக்க தங்களை அர்ப்பணித்தார்கள்.

இந்த வருட CBC Project மிக நேர்த்தியாகவும் ஆசீர்வாதமாகவும் அமைய தேவன் கிருபை தந்தார். இதற்காக ஜெபித்து, உற்சாகத்துடனும் தியாகத்துடனும் காணிக்கை கொடுத்து உதவிய திருச்சபைகள், ஊழியர்கள் மற்றும் தேவ பிள்ளைகள் ஒவ்வொருவருக்காகவும் தேவனைத் துதித்து CBC பிள்ளைகள் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கிறோம். **தேவனுக்கே மகிமையுண்டாவதாக!**

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை

ஆண்டவரும் ரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்திற்கே மகிமை உண்டாவதாக! கடந்த 11.05.2014 அன்று பொன்னப்பநகர் CSI ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. மகேஷ் K. வளுவை** (பமாரி இட்டாலா, ராஜஸ்தான்) அவர்கள் பிதிஷ்டை செய்யப்பட்டார்கள். இந்த பிரதிஷ்டை ஆராதனையில் சுதேச ஊழியர் தனது அனுபவ சாட்சியினை பகிர்ந்து கொள்ள **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் மொழியாக்கம் செய்ததோடு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின் அந்த சபை குரு **Rev. மத்தியாஸ்** அவர்கள் தலைமையில் சபை பணியாளர் **சகோ. ராபின்சன்** அவர்கள் முன்னிலையில் சுதேச ஊழியர் பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்கவும் பிரதிஷ்டை செய்யவும் முன்வந்த சபை குரு **Rev. மத்தியாஸ்** அவர்களுக்காகவும், சபை அங்கத்தினர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

---

## தேவனுக்கே மகிமை உண்டாவதாக....


ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்திற்கே மகிமை உண்டாவதாக! கடந்த 11.05.2014 அன்று மார்த்தாண்டம், காட்டாதுரையிலுள்ள பெத்தேல் மிஷன் சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டு, தேவ செய்தியளித்தார்கள். இதில் பங்குபெற்ற அநேக விசுவாசிகள் ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், ஊழியங்களைத் தாங்கவும் தங்களை அர்ப்பணித்தனர். இந்த வாய்ப்பினை வழங்கிய அந்த சபைப் போதகர் **Pr. காலேப் ஜெயக்குமார்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

---

## தேவனுக்கே மகிமை உண்டாவதாக....

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்திற்கே மகிமை உண்டாவதாக! கடந்த 18.05.2014 அன்று விக்ரமசிங்கபுரம், மேல சிவந்திபுரத்திலுள்ள CSI **பரி. கல்வாரி** ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர்கள் **சகோ. ஆலன் எல்விஸ்** மற்றும் **சகோ. ரத்திஸ் குமார்** இருவரும் பாடல்கள் மற்றும் ஆரதனை வேளையை ஏறெடுக்க, **சகோ. ஜெயபிரகாஷ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின் **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் தேவனுடை வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள். இதில் அநேகர் ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், ஊழியங்களைத் தாங்கவும் தங்களை அர்ப்பணித்தனர். இந்த வாய்ப்பினை வழங்கிய அந்த சபை குரு **Rev. J. செல்வராஜ்** அவர்களுக்காவும், திருச்சபை பணியாளர் **சகோ. J. ஜாண்** அவர்களுக்காவும், தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

## அன்பான உண்டியல் ஆதரவாளர்கள் கவனத்திற்கு



*அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!*

இந்தக் கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசிப் பிள்ளைகளும் நன்றாகப் படித்து முன்னேறி வருகிறார்கள். மேலும் ஒவ்வொரு வருடமும் நீங்கள் இந்த பீல் ஆதிவாசி மாணவர்களின் கல்வித் தேவையைச் சந்தித்து வருகின்றதற்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் நீங்கள் பீல் ஆதிவாசிச் சிறுவர்களின் கல்விக்காக சேகரித்துள்ள காணிக்கையை இந்தக் கல்வியாண்டின் துவக்கமான **ஜுன் மாதத்திற்குள்** உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளைச் சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக தினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம்.

நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காகக் கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O., D.D., or Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். அதைத் திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468 –** இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

---

## ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் கல்வி மற்றும் உயர்கல்வியினை அளித்து அவர்கள் சமுதாயத்தில் முன்னேறப் பாடுபடுவதோடு, பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு இலவச மருத்துவச் சேவை மற்றும் இதர சமுதாய முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றிவரும் **Shalom Charity Mission** க்கு அரசாங்கத்திடமிருந்து **"வருமான வரிவிலக்குச் சான்று" (80G)** 17.07.2013 முதல் கிடைக்கப் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

சமுதாய முன்னேற்றப் பணி, பீல் ஆதிவாசி சிறுவர் முன்னேற்றப்பணி, மற்றும் மருத்துவ பணிக்குக் காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள் இந்த வருமான வரிவிலக்கினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

**''அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்'' -ரோமர் 12 : 11**

## Sharing Love Mission
## செயற்குழு கூட்டம் - 2014

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் **"ஷாலோம் செயற்குழு கூட்டம்"** 25.05.2014 அன்று தூத்துக்குடி பெல் ஹோட்டலில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. இதன் நிகழ்ச்சிகளை **Prof. C.S. கிறிஸ்டோபர்** அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். பாடல் மற்றும் ஆராதனை வேளை முடிந்தவுடன் **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். அதன்பின் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் கடந்த ஆண்டு பணித்தளங்களில் நடைபெற்ற காரியங்களையும் தேவன் செய்த காரியங்களையும் குறித்து வீடியோ காட்சிகளைக் காண்பித்தார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது!

ஷாலோம் கணக்கு மற்றும் நிதி அறிக்கையினை **சகோ. பிரேம்குமார்** அவர்கள் வாசித்தபின் **பிஷப் தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியினை வழங்கி, எதிர்காலத் திட்டங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின் ஊழியங்களின் பண தேவைகளைக் குறித்தும், ஊழியப் பணியாளர்கள் தேவையைக் குறித்தும், அலுவலக நிர்வாகம் & சபை ஒருங்கிணைப்பு காரியங்கள் குறித்தும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அதன்பின் குழுவாக இணைந்து கலந்தாய்வு செய்யப்பட்டு, ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்கள் ஆத்தும அறுவடைத் திட்டங்களையும் நிறைவேற்றும்படியாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன்பின் கூட்டம் முடிவு ஜெபத்துடன் இனிதே நிறைவுற்றது.

தேவன் தந்த **Sharing Love Mission** செயற்குழு உறுப்பினர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் தேவன் ஆசீர்வதிக்கவும், அவர்கள் இன்னும் அதிக அர்ப்பணிப்புடனும் உற்சாகத்துடனும் ஷாலோம் ஊழியங்களை ஜெபித்துத் தாங்கவும், ஊழியங்களுக்கு ஆலோசனைகளை வழங்கவும் அவர்களுக்காக ஜெபியுங்கள்.

### TeÏ ùTt\ `ôúXôm ùNVtÏÝ EßI©]oLs


| | | |
|---|---|---|
| **Bishop. V. Devadass** | - | Managing Trustee |
| **Sis. Vahitha Devadass** | - | Trustee |
| **Prof. Christopher.C.S** | - | Trustee |
| **Mr. Pandian.A** | - | Trustee |
| **Mr.Arputharaj Margoschis,** | - | Trustee |
| **Prof. George.P** | - | Trustee |
| **Mr. Jambert Mathuram.P.I** | - | Trustee |
| **Mr.Sunder Raj.K** | - | Trustee |

**Invitees**

**Mr. Gladson Titus**
**Dr. Rajaratnam Abel**
**Dr. Joly Rajaratnam**
**Mr. Winston Balasingh**
**Mr. Prem Kumar**
**Mrs. Ranjani Prem Kumar**
**Mr. Jacob Bagyadoss**
**Mrs. Selvi Pandian**

## ஷாலோம் சேரிட்டி மிஷன் செயற்குழு - 2014

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் **"ஷாலோம் சேரிட்டி மிஷன் செயற்குழு கூட்டம்" 26.05.2014** அன்று தூத்துக்குடி, ஷாலோம் தலைமை அலுவலகத்தில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. பாடல் மற்றும் ஆராதனை வேளை நிறைவுற்றதும், சேரிட்டி மிஷன் மூலமாக கடந்த ஆண்டு பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் நிறைவேற்றப்பட்ட கல்விப் பணியைக் குறித்தும் பீல் ஆதிவாசி மக்கள் சமுதாய முன்னேற்றப் பணிகள் குறித்தும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

அதன்பின் எதிர்கால திட்டங்களைக் குறித்தும் பீல் மாணவர்களின் கல்வி மற்றும் சமுதாய முன்னேற்றப் பணிகள் குறித்தும் குறிப்பாக மருத்துவப் பணிகள் குறித்தும் கலந்தாய்வு செய்யப்பட்டு, அநேக திட்டங்கள் நிறைவேற்ற தீர்மானம் செய்யப்பட்டு இறுதி ஜெபத்துடன் நிறைவுற்றது.

தேவன் தந்த **Shalom Charity Mission** செயற்குழு உறுப்பினர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் தேவன் ஆசீர்வதிக்கவும், அவர்கள் இன்னும் அதிக அர்பணிப்புடனும் உற்சாகத்துடனும் ஷாலோம் ஊழியங்களை ஜெபித்துத் தாங்கவும், ஊழியங்களுக்கு ஆலோசனைகளை வழங்கவும் அவர்களுக்காக ஜெபியுங்கள்.

### TeÏ ùTt\ `ôúXôm úN¬h¥ ª`u ùNVtÏÝ Eßl©]oLs

| | | |
|---|---|---|
| **Mrs. Vahitha Devadas** | - | Founder & Managing Trustee |
| **Mr.Gladon Titus** | - | National Director |
| **Bishop. V. Devadass** | - | Patron |
| **Dr. Prema Christopher** | - | Trustee |
| **Dr. Rajaratnam Abel** | - | Trustee |
| **Mrs. Ranjini Nirmala Gnanamalar** | - | Trustee |
| **Mr. Winston John Balasingh** | - | Trustee |
| **Mr. Jacob Bagyadass** | - | Trustee |

**Invitees**

**Prof. C.S. Christopher** **Mr. Prem Kumar**

**Dr. Jolly Rajaratnam** **Mr. Gell Joseph**

### *உங்களுக்காக ஜெபிக்கிறோம்...*

**அன்பான ஆதரவாளர்களே!** உங்களுக்காகவும் உங்களது குடும்பத்திற்காவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் உங்களது ஜெபக் குறிப்புகளை **அன்பு பகிர்வு இயக்கம்** தலைமை அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்தினால் நாங்கள் உங்களுக்காக விசேஷமாக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.



# சுதேச ஊழியர்களின் பிள்ளைகளின் கல்விப் பணிக்காக உதவுவோம்

தேவகிருபையால் நம் ஷாலோம் ஊழியங்கள் மூலமாக 500க்கும் அதிகமாக எழுப்பப்பட்ட பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக 600க்கும் அதிகமான சபைகளையும், ஆயிர ஆயிரமாக விசுவாச குடும்பங்களையும் தேவன் தந்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

தேவன் நமக்கு தந்த சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் சுமார் 1500 பேர்களில் 1050 பேர்கள் கல்வி கற்று வருகிறார்கள். இவர்கள் சொந்தக் கிராமங்கள் மிகவும் பின் தங்கிய கிராமங்கள். பல மாணவர்கள் அருகில் உள்ள பள்ளிகளிலும், உயர்கல்விக்காக தொலைவில் உள்ள பள்ளிக்கூடங்களிலும் படித்து வருகிறார்கள். சுமார் 200 பிள்ளைகள் விடுதிகள் உள்ள பள்ளிகளில் படித்து வருகிறார்கள். சுமார் 100 பிள்ளைகள் ஆங்கில வழி பள்ளிகளிலும் படித்து வருகிறார்கள்.

இவர்களில் பெரும்பாலானோர் நம் ஷாலோம் மூலம் மாத ஆதரவு பெற்று தாங்கப்பட்டு வந்தாலும் ஜீன் மாதத்தில் சீருடை, பள்ளிக்கட்டணம், நோட்டு புத்தகங்கள் மற்றும் பேக் போன்றதேவையான உபகரணங்கள் வாங்க நிதி உதவி தேவைப்படுகிறது. ஆகவே குறைந்தது ரூ.1000 வீதம் ஒவ்வொரு ஊழியர்களின் 1050 பிள்ளைகளுக்கும் ஜீன் மாதம் உதவி செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

**இதை வாசிக்கும் அன்பானவர்களே, உங்களால் முடிந்த அளவு பிள்ளைகளுக்கு ரூ. 1000 வீதம் உதவி செய்து தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். இதற்கேற்றபலனை தேவன் பலமடங்கு உங்கள் சந்ததிக்கு கட்டளையிடுவாராக. நீங்கள் காணிக்கை அனுப்பும்போது சுதேச ஊழியர்களின் பிள்ளைகளின் கல்விப் பணிக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.**



## ஷாலோம் சிறுவர் வேதாகமபள்ளி (CBC) இயக்குநர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி


தேவ செய்தியளிக்கும் பிஷப். தேவதாஸ் அவர்கள்


தேவ செய்தியளிக்கும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்


பயிற்சியளிக்கும் ஊழியர்கள்




குறுநாடகம் & அபிநயப்பாடல்கள் மூலம் பயிற்சி


குழு கலந்துரையாடல் வேளை



பயிற்சியில் கலந்து கொண்வர்கள் ஆடிப்பாடி தேவனை ஆராதிக்கும் வேளை

## ஷாலோம் சிறுவர் வேதாகமபள்ளி வகுப்புகள் (CBC) - 2014


CBC வகுப்புகளை மெழுகுவர்த்தியேற்றி துவக்கிவைக்கும் பிஷப் தேவதாஸ் அவர்கள்


இறுதிநாள் CBC வகுப்புகளில் தேவ செய்தியளிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் மற்றும் Dr. Jolly Abel


ம.பி., அந்தர்வேலியாவில் நடைபெற்ற CBC வகுப்புகள்


கேடி கிராமத்தில் நடைபெற்ற CBC வகுப்புகள்


பாண்டிகேடி கிராமத்தில் நடைபெற்ற CBC வகுப்புகள்




கங்கேலா கிராமத்தில் நடைபெற்ற CBC வகுப்புகள்


முண்டத் கிராமத்தில் நடைபெற்ற CBC வகுப்புகள்


பாட்டன்புரா கிராமத்தில் நடைபெற்ற CBC வகுப்புகள்



## வாருங்கள்! பீல் ஆதிவாசி மாணவர்களை உயர் கல்விப்பணியில் தாங்குவோம்!

## கிறிஸ்துவுக்காக புதிய சமுதாயத்தை உருவாக்குவோம்!

தேவ கிருபையால் அவர் தந்த தரிசனப்படி பீல் மக்கள் மத்தியில் 3மாநிலங்களிலும் சுமார் 20,000 குடும்பங்களுக்கு மேலாக இயேசுவை ஏற்றுக்கொண்டு புதுவாழ்வு பெற்ற இவர்கள் சந்ததியைக் குறித்து மிகவும் பாரமுண்டு.

பீல் ஆதிவாசி மக்களுக்கு சில கிராமங்களில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் கூட வெகு தொலைவில் தான் உண்டு. 5ம் வகுப்பிற்கு மேல் படிப்பதற்கு இன்னும் பல கி.மீ தூரம் நடந்து சென்றாலும் தரமான கல்வி கற்றுக் கொடுக்க பள்ளிகள், ஆசிரியர்கள் கூட கிடையாது. மேலும் +1 மற்றும் +2 படிப்பதற்கு ஒரு தாலுகாவிற்கு சில பள்ளிகள் மட்டுமே உண்டு. போக்குவரத்து வசதியும் வீட்டில் படிப்பதற்கு சூழ்நிலையும், போதிய பண வசதியும் இல்லாமல் உயர் கல்விக்கு போவது மிக கடினம். கல்லூரி மற்றும் பிற வேலை வாய்ப்பிற்காக படிப்பதை எண்ணிக் கூட பார்க்க முடியாது. அப்படியே படித்தாலும் பணத் தேவைகளுக்காக மாதம் 10% வட்டி கட்டும்படியாக கடன் வாங்கி வேதனைப்படுவார்கள்.

தேவ கிருபையால் நாம் ஷாலோம் ஊழியத்தின் மூலம் சுமார் 1050 பிள்ளைகளைப் படிக்க வைத்து வருகிறோம். மாதம் ரூ. 600/– ஜெபித்துத் தரும் ஆதரவாளர்களின் உதவித் தொகை மூலமாக இவர்களை 9ஆம் வகுப்பு வரை தாங்கிவிடலாம். ஆனால் 10,11,12 மற்றும் கல்லூரிப் படிப்பிற்காக, வீட்டைவிட்டு நகரத்துக்கு வந்து, தனி அறை எடுத்து, சமைத்து உண்டு படிக்க முடிவதில்லை. மேலும், மாணவர்களுக்கு விடுதி வசதிகள் குறைவு. மேலும் நம் ஷாலோம் மாணவர்கள் டியூசன் படித்து நல்ல மதிப்பெண்கள் பெற வாஞ்சிக்கிறார்கள். நல்ல மதிப்பெண்கள் பெற்றவர்கள் Nurse, Teacher, Computer Course இப்படிப்பட்ட படிப்பிற்கு செல்ல ஆயத்தமாகிறார்கள். மேலும் சில சுதேச ஊழியரின் பிள்ளைகளில் மிக ஞானமுள்ளவர்கள் ஆங்கிலப் பள்ளிகளில் சேர்ந்து நன்கு படிக்கிறார்கள். **இவர்களுக்கு 3 அல்லது 4 வருடங்களுக்கு படிப்பிற்கு ஏற்றபடி கூடுதலான செலவுகளாக ரூ. 10,000/-, ரூ. 20,000/-, ரூ. 30,000/- என நிதி உதவியை சுமார் 200 மாணவர்களுக்கு நாம் செய்ய வேண்டும்.**

இவர்கள் படித்து முடித்து நல்ல வேலைக்கு வந்த பின்பு குடும்பத்திற்கும், சபைக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக அமைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. உங்கள் குடும்பம் மற்றும் சபையின் சார்பில் ஒரு ஆதிவாசி மாணவனை ஜெபித்து தாங்கி ஆசீர்வதிக்க அன்புடன் அழைக்கிறோம். தேவன் உங்களையும் உங்கள் சந்ததியையும் ஆசீர்வதிப்பாராக !

மேற்கண்ட கல்விப் பணிக்காக காணிக்கைகளை அனுப்பும்போது **SHALOM CHARITY MISSION** என்ற பெயரில் D.D. or. Cheque அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களது வங்கிக் கணக்குகளிலும் நீங்கள் நேரடியாக காணிக்கைகளை செலுத்தலாம்.

வங்கிக் கணக்கு
**SHALOM CHARITY MISSION**
**Axis : 105010100096779**
**TMB : 174100710400061**

குறிப்பு : நீங்கள் **Shalom Charity Mission** க்கு செலுத்தும் காணிக்கைகளுக்கு **80G** வரி விலக்கு உண்டு

# பணித்தளத்தின் அவசிய தேவைகளும் உங்கள் பங்கும்

***கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே!***

தேவ கிருபையால் தேவன் தந்த பீல் மக்கள் இரட்சிப்பின் தரிசனப் பணியில் கடந்த 22 ஆண்டுகளாக அவர் எங்கள் குடும்பத்தையும் 575 பீல் சுதேச ஊழியர்களையும் வல்லமையாக பயன்படுத்தி வருகிறார்.

2016 ஆம் ஆண்டிற்குள் **(ஷாலோம் ஊழியத்தின் வெள்ளி விழா ஆண்டு)** 1000 சுதேச ஊழியர்களை எழுப்பி அவர்களை பயிற்றுவித்து, 1000 ஸ்தல மற்றும் ஸ்திர சபைகளை தேவ நாம மகிமைக்காக எழுப்பும்படியாக ஜெபித்து ஆவியானவரின் பெலத்துடன் செயல்பட்டு வருகிறோம். இந்த மிஷனெரிப் பணியில் சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட்டு, அவர்கள் தாங்கப்பட்டு வருகிறார்கள். அதே வேளையில் இதுவரை எழுப்பப்பட்ட 600க்கும் அதிகமான சபைகளை ஸ்திரப்படுத்தும்படியாக அநேக ஆவிக்குரிய கூட்டங்கள் மற்றும் சீடத்துவ முகாம்கள், தலைமைத்துவ பயிற்சி நடத்தப்பட வேண்டும். மேலும் பல உபகரணங்கள், தளவாடங்கள் பணித்தளத்திற்கும் சபை ஊழியங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். இந்தத் தேவைகளை நான் எழுதுகிறேன். முதலாவது தேவன் இந்த அவசர, அவசியமான தேவைகளை சந்திக்கும்படியாக ஜெபியுங்கள். இரண்டாவதாக ஆவியானவர் ஏவினால் தியாகத்துடன் ஏதாவது ஒரு பங்கினை உங்கள் குடும்பம், சபை சார்பில் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். மூன்றாவதாக மற்றவர்களும் இந்த ஊழியங்களுக்காக ஜெபிக்கும்படியாகவும் தாங்கும்படியாகவும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

## 100 கிராம ஆலய கட்டுமானப் பணிகள்

தேவனுக்குச் சித்தமானால் இந்த 2014 ஆம் ஆண்டு, மூன்று மாநிலங்களிலும் மொத்தம் 100 கிராமங்களில் ரூ. 2 இலட்சங்களின் மதிப்பில் கிராம ஆலயங்களை கட்டும்படியாக ஜெபித்து செயல்பட்டுவருகிறோம். இதுவரை இந்தப் பணிகளுக்காக நிதி உதவி கொடுத்தும், கொடுக்கத் தீர்மானம் எடுத்தவர்கள் மூலமாக சுமார் 25 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் 75 கிராம ஆலயங்கள் கட்டப்பட நிதி உதவி கிடைக்க ஜெபியுங்கள்.

## பணித்தளத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய ஆவிக்குரிய கூடுகைகள்

ஊழியர் பயிற்சிகள், சீஷத்துவ முகாம்கள், தலைவர்கள் பயிற்சிகள், ஓய்வுநாள் பாடசாலை வகுப்புகள், CBC (சிறுவர் வேதாகமப் வகுப்புகள்) , பெண்கள் கூடுகைகள், மூப்பர்கள் பயிற்சி, ஊழியர்களின் எழுப்புதல் தரிசனக் கூடுகை, வாலிபர் முகாம்கள், சிறுவர்கள் முகாம்கள், பகுதிவாரியாக எழுப்புதல் ஜெப முகாம்கள் என வருடம் முழுவதும் ஊழியங்கள் 1000 கிராமங்களில் நிறைவேற்றப்பட மாதா மாதம் குறைந்தது **ரூ. 5 இலட்சங்கள்** தேவை. இந்தத் தேவைகளைச் சந்திக்கும்படியாக மாதம் **ரூ. 1000/–** கொடுத்துத் ஜெபித்துத் தாங்கக் கூடிய **500 ஆதரவாளர்கள்** அல்லது மாதம் **ரூ. 500/–** கொடுத்துத் ஜெபித்துத் தாங்கக் கூடிய **1000 ஆதரவாளர்கள்** உடனடியாகத் தேவை.

# ஷாலோம் ஊழியத்தின் அவசர மற்றும் அவசியத் தேவைகள்




- மூத்த சுதேச ஊழியர்களான Area Leaders களுக்கு, அவர்கள் ஒவ்வொருவரும் 20 கிராம சபைகளை கண்காணிக்கவும், வெளி ஊழியங்களுக்குச் செல்லவும் **ரூ. 40,000/– மதிப்பில் 50 மோட்டார் சைக்கிள்கள் தேவை.**



- சுமார் 300 சபைகளுக்கு **ரூ. 3000/–** மதிப்பில் **டோலாக், ஜால்ரா, சிங்கி** மற்றும் கிராம சபைகளில் உபயோகப்படுத்தக் கூடிய **இசைக் கருவிகள்** தேவை.




- 400க்கும் அதிகமான சபைகளில் மின்சார வசதி கிடையாது. வசதிகள் இருந்தாலும் ஒழுங்காக மின்சாரம் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட கிராமங்களில் அதிகமான விசுவாசிகள் உள்ள சபைகளுக்கு சுமார் **ரூ. 5000/–** மதிப்பிலான பேட்டரியுடன் இயங்கக்கூடிய **Ahuja, Stranger, Speaker Box with Amplifier** போன்ற உபகரணங்கள் 300 சபைகளுக்குத் தேவை.



- இந்த ஆண்டு 5000 புதிய விசுவாசக் குடும்பங்களுக்குக் கொடுக்கும்படியாக குஜராத்தி ஹிந்தி மொழிகளில் **ரூ. 100/– வீதம், 5000 வேதாகமங்களுக்கு,** நிதி உதவி தேவை.



- இந்தக் கல்வியாண்டில் நம் சுதேச ஊழியர்களின் பிள்ளைகளில் குறைந்தது 1000 பேருக்காவது சீருடைகள், பள்ளி நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பேக்குகள் கொடுக்கப்படவும் பள்ளிக்கூட கட்டணம் செலுத்தப்படவும் வேண்டும். இதற்காக ஒரு வருடத்திற்கு ஒரு மாணவருக்கு குறைந்தது ரூ. 1000/– தேவைப்படுகிறது. 1050 மாணவருக்கு கொடுத்து உதவும் ஆதரவாளர்கள் தேவை.



- சுவிசேஷம் அறிவித்தல், ஆத்தும ஆதாயம் செய்து சபைகளை உருவாக்குதல் போன்ற பணிகளை நம் பீல் சுதேச ஊழியர்கள் திறம்பட செய்து வருகிறார்கள். பணித்தளத்தில் Accounts, Administration, Projects, Media, Letreature, Maintanance Training என பல துறைகளில் பணிபுரிய அர்ப்பணிக்கப்பட்ட குடும்பங்கள் தேவை.

- தமிழ்நாட்டில் ஷாலோம் ஊழியங்களை குறைந்தது 70 பேருக்காகவது அறிமுகம் செய்து, தங்கள் தேவைகள் மத்தியில் பீல் மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்களை எழுப்பி நிதி உதவி சேகரித்து அனுப்பும் ஷாலோம் பிரதிநிதிகள் குறைந்தது 500 பேர்கள் தேவை.

**ஜெபிப்போம்! கொடுப்போம்! செயல்படுவோம்!**
**தேவ நாமத்தை மகிமைப்படுத்துவோம்!**

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

| நாள் **14.06.2014,** *சனிக்கிழமை* | நேரம் *மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை* |
|---|---|

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

**அனைவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிப்பதுடன், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.**

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

---

**தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும்**

£\l×d áÓûLLs

Yôd Ï jRjR B ºoYôR ù_Td áÓûL

நாள் : **02.06.2014 (திங்கள் கிழமை)** நேரம் : **காலை 9.15** முதல் **1.00**

தேவச் செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

` ôúXôm ETYôNd áÓûL

நாள் : **14.06.2014 (சனிக்கிழமை)** நேரம் : **காலை 9.15** முதல் **1.00**

தேவச் செய்தி : **Pr. J. செல்வின்துரை**

ஜீவ வார்த்தை ஊழியங்கள், தூத்துக்குடி.

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

5/168, கால்டுவெல் காலனி 3 வது தெரு, தூத்துக்குடி – 628 008.

---

# ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

நாள் : **28.06.2014** (சனிக்கிழமை)



நேரம் : **நள்ளிரவு 12.00 மணி** முதல் **மறுநாள்**
**நள்ளிரவு 12.00 மணி வரை (24 மணிநேரம்)**

**நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது ஒரு மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.**

# பொம்மலாட்டம் பயிற்சி - 2014




கர்த்தருடைய பெரிதான கிருபையினால், கடந்த ஏப்ரல் மாதம் 21ம் தேதி பொம்மலாட்டம் பயிற்சி (Puppet Show Training) நடத்தப்பட்டது. இதில் நமது ஷாலோம் பயிற்சிக் குழு பணியாளர்கள், Compassion Project பணியாளர்கள், ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பிஜல்பூரிலிருக்கும் நமது ஷாலோம் பள்ளி பணியாளர்களுமாக மொத்தம் 80 பேர் கலந்து கொண்டனர். இந்தப் பயிற்சியினை சென்னையிலிருந்து வந்திருந்த **சகோ. ரமேஷ்** மற்றும் **சகோ. பிளஸ்வின்** இருவரும் நடத்தினார்கள். Puppet – என்பது சிறுவர்களின் கவனத்தை



வெகு விரைவாக ஈர்க்கும் கருவி என்று அதன் முக்கியத்துவத்தை பகிர்ந்ததோடு, Puppet ஐ எப்படிக் கையாளுவது, Puppet Show மூலமாக பிள்ளைகளை எப்படி தேவனண்டை நடத்துவது, அதன் மூலம் வேத வசனத்தை எப்படி பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பது மேலும் குரலை மாற்றி எப்படிப் பேசுவது போன்ற காரியங்களைக் கற்றுக் கொடுத்தார்கள்.



மேலும் அநேக காரியங்களைக கற்றுக் கொடுத்தது மட்டுமல்லாமல், கலந்து கொண்டவர்களுக்கும் செய்முறை செய்து பார்க்கவும் வாய்ப்பளிக்கப்பட்டது. இதன் மூலம்



பயிற்சி பெற்றவர்கள் தங்களாலும் செய்ய முடியும் என்கிற நம்பிக்கையையும் தைரியத்தையும், பெற்று ஆர்வத்துடன் முயற்சி செய்தார்கள். இதைக் கற்றுக் கொண்டதின் விளைவாக நமது பயிற்சிக் குழுவினர் CBC பயிற்சியில் சிறப்பாகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் Puppet Show செய்தார்கள். இந்த பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரும் தங்கள் சபைகளில் Puppet Show மூலமாக சிறுவர்களை தேவனன்டை நடத்த வேண்டும் என்ற வாஞ்சையோடும் தீர்மானத்தோடும் திரும்பிச் சென்றனர். **அல்லேலூயா !**

---

**"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?."** 1 கொரி. 6 : 19

# T ¦ jR[ j§p úRYu ùÑnR At×ReLÞdLôL úRYû ] j Õ§ÙeLs!

## குஜராத் மாநிலம்

**Pr. நவால் புரியா** **சலப்பாடா**

காளிபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக ஜெபிக்கும்படி சபைக்குக் கொண்டு வந்தார்கள். இவருக்காக விசுவாசத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலை கொடுத்தார்.

**Pr. ரத்தன் மாவி** **கங்கேலா**

பாபுபாய் என்ற சகோதரன் ஒரு வருடமாக சாத்தானின் பிடியினில் சிக்கி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தார்.

மீனா என்ற சகோதரி எப்போதும் வயிற்றுவலியினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். இவரை சுகமளிக்கும் கூட்டத்திற்கு அழைத்துவந்தார்கள். அங்கு சபையார் அனைவரும் இணைந்து இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. சுரேஷ் ஹுட்டில்லா** **தாகோத்**

கைலாஷ் பாய் என்ற 30 வயது சகோதரருடைய வயிற்றில் இருந்த கட்டியினால் மிகவும் வேதனைப்பட்டு வந்தார். நிறைய பணம் செலவு செய்து மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் பலனில்லை. இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் கட்டி இருந்த இடம் தெரியாமல் மறையச் செய்தார்.

**Pr. நவால் புரியா** **சலப்பாடா**

நான்சிங் என்பவரை பாம்பு கடித்துவிட்டது. உடனே போன் செய்து ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். தொலைபேசியில் இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் தாமே ஜீவனைப் பாதுகாத்தார்.

மீனா என்ற சகோதரி 7 ஆண்டுகளாக அசுத்த ஆவியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். ரூ. 50,000/– க்கும் அதிகமாக செலவு செய்து மருத்துவம் மற்றும் மந்திர கிரியைகள் செய்தும் பலனில்லை. இறுதியாக இவருக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறி ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

ரோஷ்னி என்ற 3வயது சிறுமி மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாள். மருத்துவமனைக்குக் கொண்டு சென்றும் பலனில்லாமல் நமது ஷாலோம் சபைக்கு ஜெபிக்கும்படியாக கொண்டு வந்தார்கள். இவளுக்காக இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது தேவன் அற்புதமான சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. வீர்சிங் பாரியா** **தார்மி**

கல்சிங்பாய் என்ற சகோதரனின் மனைவி 2 வருடமாக சாத்தானின் பிடியினால் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டுவந்தார். இவரை ஷாலோம் சபைக்கு ஜெபிக்கும்படியாக கொண்டு வந்தார்கள். இவருக்காக உபவாசித்து ஜெபித்தபோது தேவன் சாத்தானின் பிடியிலிருந்து அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

# T ¦ jR[ j§p úRYu ùNnR AtxReLÞdLôL úRYû ] j Õ§ÙeLs!

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. பிரேம்சந்த் வாசுனியா — இட்டாவா**

கல்லாபித்தா என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் மிகவும் பாதிக்கப்பட்டு, மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கையில் இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. சூப்பர் டாமோர் — அலிப்புட்ரா**

சந்திரிகாபேன் என்ற சகோதரி குழந்தை பாக்கியம் இல்லாமல் மிகவும் வேதனைப்பட்டார். எவ்வளவோ மருந்துகள் சாப்பிட்டும், மருத்துவம் செய்தும் பலனில்லை. கடைசியாக ஜெபிக்கும்படியாக நமது ஷாலோம் சபைக்கு அழைத்துவந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் குழந்தைச் செல்வத்தைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

**Pr. மங்கிலால் அமளியார் — கெர்கா**

பால்கலியா என்ற சகோதரன் மனநிலை பாதிக்கப்பட்டு பைத்தியமாக அலைந்தார். இவரது குடும்பத்தினருக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறி இந்த சகோதரனுக்காக ஜெபித்தபோது தேவன் நல்ல தெளிந்த மனநிலையை கொடுத்தார்.

**Pr. மால்சிங் மெய்டா — பாண்டாகாபார்**

ஜீம்காபேன் என்ற சகோதரிக்கு திருமணமாகி மூன்று ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லை. இவருக்காக ஜெபிக்கும்படியாக நமது ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் குழந்தை பாக்கியத்தைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

கிஷன்பாய் என்ற சகோதரன் மந்திர கிரியைகள் செய்து ஊர், ஊராய் சுற்றித் திரிபவர். இவர் மனதில் நிம்மதி, சமாதானம் இல்லாமல் அலைந்தார். இவருக்கு சுவிசேஷம் அறிவித்து இவருக்காக ஜெபித்தபோது, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு உள்ளத்தில் சந்தோஷம் சமாதானம் பெற்றுக் கொண்டு மந்திரத் தொழிலை விட்டுவிட்டார்.

**Pr. நாகட்டியா கர்வால் — ஒஸ்கா**

கல்லுபாய் என்ற சகோதரர் சிறுநீர் போகாமல் மிகவும் சிரமப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது, தேவன் நல்ல சுகத்தினைத் தந்தார்.

பச்குபாய் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் மிகவும் அலைக்கழிக்கப்பட்டார். இவரை ஷாலோம் சபைக்குக் கொண்டு வந்து இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அசுத்த ஆவியை விரட்டி விடுதலை கொடுத்தார்.

**Pr. மங்கிலால் அமளியார் — கெர்கா**

ஷீபாபேன் என்ற சகோதரி சில வருடங்களாக வியாதிப்பட்டிருந்தார். இவருடைய கை மற்றும் கால்கள் வீங்கி இருந்தன. இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. டிடியாவானியா — அமலிபட்டார்**

கம்ஜிவாளியா என்ற சகோதரனுக்கு மனதில் பயம் மற்றும் நடுக்கம் வந்து மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலைக் கொடுத்தார்.

## T ¦ jR[ j§p úRYu ùÑnR A t×ReLÞdLôL úRYû ] j Õ§ÙeLs!

### இராஜஸ்தான் மாநிலம்

**Pr. காத்து சாரேல் — காச்லா**

ரம்யாபேன் என்ற சகோதரிக்கு மாந்திரீக தொல்லைகளின் நிமித்தமாக கண்களில் பூச்சி ஓடுவது போன்று இருக்கும். இந்த சகோதரிக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. மான்சிங் டின்டோட் — சோரியா**

கல்பேஷ் என்ற சகோதரர் பிறவியிலேயே முடவனாக இருந்தார். இவரை நமது ஷாலோம் சபைக்கு ஜெபிக்கும்படியாக அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தினைக் கட்டளையிட்டார்.

விக்லிபேன் என்ற சகோதரி 15 ஆண்டுகளாக கொடிய வியாதியினால் பாதிக்கப்ட்டிருந்தார். இவரை சபைக்குக் கொண்டு வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் வியாதியில் இருந்து பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. துல்ஜி கராசியா — குண்டிபாடா**

குண்டிபாடா கிராமத்தைச் சேர்ந்த புர்சிங்பாய் என்ற சகோதரனும், ஷீனிதாபேன் என்ற சகோதரியின் கணவரும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார்கள். இவர்களுக்காக ஜெபித்தபோது தேவன் குடிப் பழக்கத்திலிருந்து இவர்களுக்கு விடுதலை கொடுத்தார்.

**Pr. காலுசிங் கராசியா — ராவ்தாசாத்**

மனீஷா பேன் என்ற சகோதரி நெஞ்சில் இருந்த கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் கட்டியை மறையச் செய்து அற்புதம் செய்தார்.

**Pr. ரமேஷ் டாமோர் — பேடவ் துலியா**

சுசீலாபேன் என்ற சகோதரி ஆஸ்துமா வியாதியினால் பாதிக்கப்பட்டு பேசக்கூட முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் பூரண சுகத்தினைக் கொடுத்தார்.

**Pr. தினேஷ் பார்கி — மோனாதுங்காரி**

ரஞ்ஜிபாய் என்ற சகோதரனின் மனைவி காளிபேன் ஆஸ்துமாவினால் வேதனைப்பட்டார் இவருக்காக ஜெபித்தபோது தேவன் ஆஸ்துமா வியாதியில் இருந்து அற்புதமான சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. சாபு டின்டோர் — புரக்குவா**

நர்மதாபேன் என்ற சகோதரியின் வயிற்றில் ஏற்பட்ட கட்டியினால் மிகவும் வேதனைப்பட்டு வந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தினைக் கட்டளையிட்டார்.

துர்காபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு கொண்டு வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அசுத்த ஆவிகளை துரத்தி அற்புதம் செய்தார்.

**Pr. காலு டின்டோட் — தாட்கா**

அஜினாபேன் என்ற சகோதரி முழங்கால் வலியினாலும், சப்பூபேன் என்ற சகோதரி கழுத்து வலியினாலும் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார்கள். இவர்களுக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

# úRY ²PmúY i ¥dùLôs ÞeLs



**ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பிற்காக.**

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்ப நலனுக்காக.**

✞ **பேராயர். தேவதாஸ்,** அவர்களின் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தைப் பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாகப் பயன்படுத்த ஜெபியுங்கள்.

**பரிசுத்த வேதாகமங்களின் தேவைகளுக்காக**

✞ இந்த 2014 ஆம் ஆண்டிற்குள் சுமார் 5000 பீல் ஏழை ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். இதுவரை 1500 வேதாகமங்களுக்கான தேவைகள் சந்திக்கப்பட்டமைக்காக தேவனைத் துதிக்கிறோம். ஒரு வேதாகமத்திற்கு ஆகும் செலவு ரூ. 100 வீதம் 3500 வேதாகமங்களுக்கான தேவைகளான ரூ. 3.5 இலட்சங்கள் சந்திக்கப்படவும், விசுவாசிகளுக்கு வேதத்தின் மூலம் ஒரு பெரிய ஆசீர்வாதத்தினைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷனின் வளர்ச்சிக்காக.**

✞ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள், வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள், பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து வழி நடத்தும்படியாக ஜெபியுங்கள்.

**ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காக**

✞ பணித்தளத்தில் செயல்பட்டு வரும் **ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காகவும்,** அதில் பொறுப்பேற்றுள்ள **Dr. இன்பக்குமார்** அவர்களுக்காகவும், இந்த மருத்துவமனை மூலம் அநேக ஏழை ஆதிவாசி ஜனங்கள் பயனடையவும், இதன் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட்டு, தேவ நாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

**கிராம ஆலயங்களுக்காக**

✞ தேவன் தந்த தரிசனத்தின்படி, பீல் ஆதிவாசி ஜனங்களின் மத்தியில் இந்த 2014ஆம் ஆண்டிற்குள்ளாக 100 கிராம ஆலயங்களைக் கட்டும் தேவ பணியில் ஜெபித்து செயல்பட்டு வருகிறோம். இதற்கு எதிராக வரும் தடைகளை தேவன் நீக்கும்படியாகவும், இதற்கான தேவைகளை சந்திக்க தேவன் ஆதரவாளர்களை எழுப்பித் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் வெள்ளிதோறும் நடைபெறும் சுகமளிக்கும் ஆரதனைகளுக்காக**

✞ பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள். இந்த ஆராதனைகளில் உடலிலும் மனதிலும் குறையுள்ள ஜனங்கள் அநேகர் பங்குபெறவும், இதன் மூலம் அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு தேவனண்டையில் சேர்க்கப்படவும் ஜெபியுங்கள்.

**சிறுவர் வேதாகமப் பள்ளியில் பங்கு பெற்ற பீல் சிறுவர்களுக்காக**

✞ பணித்தளங்களில் கடந்த மே மாதம் 650க்கும் அதிகமான கிராமங்களில் நடைபெற்ற சிறுவர் வேதாகமப் பள்ளிகளில் சுமார் 35 ஆயிரத்திற்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்கள் பங்கு பெற்றனர். இதில் விசுவாச சிறுவர்கள் மட்டுமல்லாமல், கிறிஸ்துவை அறியாத அநேக சிறுவர்களும் பங்கு பெற்று ஆசீர்வதிக்கப்பட்டனர். **தேவனுக்கே மகிமை!** இவர்களை தேவன் தொடர்ந்து ஆசீர்வதிக்கவும், தொடர்ந்து தேவனுக்குள்ளாக நடத்தப்படவும் ஜெபியுங்கள்.

**புதிய கல்வியாண்டிற்குள் நுழையும் பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக**

✞ இந்த ஜுன் மாதம் புதிய கல்வியாண்டிற்குள் நுழையவிருக்கும் நமது பீல் ஆதிவாசி மாணவர்களை தேவன் ஆசீர்வதித்து நல்ல சுகம் பெலன் தந்து ஞானத்தால் நிரப்பவும், இவர்களது கல்வி தேவையினை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.

✞ மேற்படிப்பிற்காக காத்திருக்கும் மாணவ மாணவிகளுக்கு தேவன் நல்ல மதிப்பெண்களைத் தந்து அவர்களது வாஞ்சையின்படி மேற்படிப்பிற்கு இடங்கள் கிடைக்கவும், இவர்களுக்காக தேவன் சிறப்பு ஆதரவாளர்களை எழுப்பித் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் தலைமை மற்றும் கிளை அலுவலகங்களுக்காக**

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், சென்னை, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகங்கள் போன்ற அலுவலகங்களில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வரும் நமது சகோதர சகோதரிகளுக்காகவும், மேலும் ஊழியத்தில் தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளைச் சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

**ஊழியங்களுக்காக ஜெபிப்போரும் ஊழியங்களைத் தாங்குவோரும் எழுப்பப்பட**

✞ தேவன் தந்த தரிசனத் திட்டமான ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பின் பணியில் நடைபெறும் இந்த மாபெரும் ஊழியத்தினை ஜெபத்தில் தாங்கக் கூடிய ஜெபப் பங்காளர்களை ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்டங்களிலும் எழுப்பவும், இந்த மாபெரும் திட்டப்பணியின் தேவைகள் சந்திக்கப்பட அநேக ஆதரவாளர்கள் மற்றும் ஊழிய பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**இந்திய தேசத்தில் தேவன் தந்த புதிய ஆட்சிக்காக**

✞ தேவன் தமது சித்தத்தின்படி தந்துள்ள புதிய பிரதமருக்காவும், புதிய ஆட்சியாளர்களுக்காகவும், தேவ சித்தம் இந்திய தேசத்தில் நடைபெறவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

பாளையங்கோட்டையில் முதல் விசுவாசியான குளோரிந்தாள் அம்மையார் மூலம் தோற்றுவிக்கப்பட்ட சபைகளை கண்காணிக்க 1785ஆம் ஆண்டு ஏ. சத்தியநாதன் என்பவரை ஓர் உபதேசியாராக நியமித்து பின்பு 1790ஆம் ஆண்டு சுவாட்ஸ் ஐயர் அவரை அபிஷேகித்து குருவானவராக நியமித்தார். சாத்தான்குளம் அருகிலுள்ள காலன்குடியைச் சார்ந்த சின்னமுத்து என்ற இளைஞர் தன் வீட்டை விட்டு வெளியேறி தஞ்சாவூர் சென்றார். அங்கு சுவாட்ஸ் ஐயர் மூலமாக கிறிஸ்துவை அறிந்து கொண்டு தாவீது சுந்தரானந்தம் என்று ஞானஸ்நானம் பெற்று சத்தியநாதன் ஐயருக்கு உதவியாயிருந்து சாத்தான்குளம் சுற்றியுள்ள 75 கிராமங்களின் 5000 பேருக்கு அதிகமானவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அந்த 75 கிராமங்களில் அன்று சாண்பத்து என்று அழைக்கப்பட்ட நாசரேத் என்ற கிராமமும் அடங்கும்.

ஜேம்ஸ் ஹாப் ஐயர் SPCK சங்கத்தாரின் உதவியோடு நாசரேத்தில் 1819ஆம் ஆண்டு ஓர் ஆண்கள் பள்ளியும், 1820ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் தேதி ஒரு பெண்கள் பள்ளியும் நிறுவினார். ஆனால் 1826ஆம் ஆண்டு பெண்பிள்ளைகளை பெற்றோர் அனுப்ப முன்வராததால் அந்த பெண்களுக்கான பள்ளி மூடப்பட்டது. 1843ஆம் ஆண்டு கேமர் ஐயருடைய மனைவி அனிகேமர் அம்மையார் மீண்டும் அப்பள்ளியை ஆரம்பித்தார். பெண் கல்வி ஆரம்பத்தில் கஷ்டமாக தோன்றியது. 1846ஆம் ஆண்டில் ஆலயத்திற்கு முன்னால் ஒருகட்டம் கட்டி அதில் இந்த பள்ளியை அனி கேமர் அம்மையார் நிலைப்படுத்தினார். 1948ஆம் ஆண்டு பள்ளியோடு சேர்ந்த போர்டிங் (விடுதி) ஆரம்பிக்கப்பட்டது.

பிரதர்டன் ஐயருடன் அவருடைய சகோதரி ஸ்கார்பரோ அம்மையாரும் நாசரேத் வந்து 1862ஆம் ஆண்டு 41 பெண்கள் கொண்ட விடுதியை மீண்டும் ஏற்படுத்தினார்கள். பெண்கள் ஆரம்பப்பள்ளி நடுநிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டது. 1870ஆம் ஆண்டு ஸ்டாரஹ்கன ஐயர் நாசரேத் மிஷன் பொறுப்பை ஏற்றார். ஹேரியட் ஸ்ட்ராஹ்சன் அம்மையாரின் மேற்பார்வையில் பள்ளி சிறப்பாக நடைபெற்றது. 1876ஆம் ஆண்டு மர்காஷிஸ் ஐயர் அவர்கள் நாசரேத் வந்தார். அடுத்த ஆண்டே பெண்கள் பள்ளியின் ஒருபகுதியாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை ஆரம்பித்தார். மர்காஷிஸ் ஐயர் அவர்களின் கடும் முயற்சியால் பெணகள் பள்ளி அரசு அங்கீகாரம் பெற்றது. 1886ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளியாக உயர்வு பெற்றது. மர்காஷிஸ் ஐயரவர்கள் SPG சங்கத்தாரின் பேருதவியோடு SPCK சங்கத்தாரின் உதவியும் சேர்ந்து 1908ஆம் ஆண்டு பள்ளிகூடத்தின் அஸ்திபாரம் போடப்பட்டு கனம் குரோவ்ஸ் அம்மையார் பள்ளிக்கூடத்தின் மானேஜராக நியமிக்கப்பட்ட 1910ஆம் ஆண்டு செப்டம்பர் 15ல் பள்ளி கட்டட வேலையை முடித்து அதை பிரதிஷ்டை செய்தார்கள். வெஸ்ற்றன் ஐயரவர்களிடமிருந்த இடத்தில் 1914ஆம் ஆண்டு விடுதி அமைக்கப்பட்டு மாணவிகள் அங்கே குடிபுகுந்தனர்.

1920ஆம் ஆண்டில் லிலியன் எவன்ஸ் அம்மையார் உயர்நிலைப்பள்ளியின் தலைவியாக நியமிக்கப்பட்டு அருபெரும் தொண்டாற்றினார். மிஸ்குரோவ்ஸ் அம்மையாரும் பள்ளியில் தலைமைப் பொறுப்பேற்று சிறந்த பணி செய்தார்கள். மேலும் தலைமை ஆசிரியராக திரு. கோலாப் அவர்களும், சாமுவேல் ஜோசப் அவர்களும் இப்பள்ளிக்குச் சேவை செய்வதில் முன்னோடியாய் விளங்கினர். 1938ஆம் ஆண்டு சிற்றாலயம் ஒன்று கட்டப்பட்டு பேராயர் செல்வின் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

1943ஆம் ஆண்டு பள்ளியின் நூற்றாண்டு கொண்டாடப்பட்டது. 1947ஆம் ஆண்டு கனம் நீல் பேராயர் அவர்கள் தலைமையில் பொதுகூட்டம் நடைபெற்றது. 10000 பொதுமக்கள் கூடினார்கள். 1000 ஏழைகளுக்கு அன்று விருந்தளிக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டு மேல்நிலைப்பள்ளியாக உயர்வு பெற்றது. 1984, 1986ஆம் ஆண்டுகளில் புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டன. டாக்டர். சாலமோன், டாக்டர். கிருபா சாலமோன் நினைவுக் கட்டடம் கட்டப்பட்டது. 1989ஆம் ஆண்டு புதிய விடுதியும், 1994ஆம் ஆண்டு அறிவியல் ஆய்வகமும் கட்டப்பட்டன. 2002ஆம் ஆண்டு பெண்கள் பள்ளியை முதல் முதலில் ஆரம்பித்த ஹாப் ஐயரின் நினைவாக ஹாப் நிர்வாகக் கட்டடம் கட்டப்பட்டது. 2004ஆம் ஆண்டு இராஜம்மாள் துரைசாமி கலையரங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சிற்றாலயம் புதுபிக்கப்பட்டு மறுபிரதிஷ்டை செய்யப்பட்டது. 2012ஆம் ஆண்டு பேராயர். ஜெபச்சந்திரன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

1820ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதி 10 பெண்கள், ஒரு ஆசிரியர் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தூய யோவான் பெண்கள் மேல்நிலைப்பள்ளி தற்போது சுமார் 1500 மாணவிகள், 40க்கு மேற்பட்ட ஆசிரியைகள், 7 ஆசிரியர் அல்லாத பணியாளர்களை கொண்ட பள்ளியாக தமிழ்நாட்டிலேயே பல சிறப்புகள் பெற்றுச் சாதனை பல படைத்த பெண்கள் பள்ளி என்ற பெயரோடு கிறிஸ்துவின் நாமத்திற்கு மகிமையாக கல்விப்பணி செய்து சீரும் சிறப்போடும் திகழ்கிறது.

தியாக உணர்வோடுள்ள நிர்வாகக்குழு, தலைமை ஆசிரியை, உதவி ஆசிரியைகளின் மற்றும் பணியாளர்களின் அர்ப்பணிப்புள்ள சேவையால் தூய யோவான் பெண்கள் மேல்நிலைப்பள்ளி எதிர்காலத்தில் அநேக உயர்வுகள் பெற்று சிறந்த பெண் தலைவர்களை உருவாக்கி புகழுடன் திகழ மனநிறைந்து வாழ்த்துகிறோம்.

**பல நூற்றாண்டுகளாக நம் பாரத மண்ணில் அயல்நாட்டிலிருந்து வந்து சேவை செய்த இயேசுவின் அடியார்கள் தங்கள் தியாகத்தால் உறுவாக்கின கல்வி ஸ்தாபனங்கள் நமக்கு தலைமுறை தலைமுறையாக ஆசீர்வாதத்தை அளித்துக் கொண்டிருக்கின்றன. இதேபோல் இன்று தேவையுள்ள பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு நாம் அளிக்கும் கல்விப் பணி அநேக ஆண்டுகள் கழித்து பீல் மக்கள் தலைமுறை தலைமுறையாக நினைவு கூர்ந்து கிறிஸ்து இயேசுவுக்கு நன்றி பகரும் வண்ணமாக அவருக்கு சாட்சியாக வாழ்வார்கள் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.**

மேலும் இந்தப் பள்ளியிலிருந்து பீல் மக்களின் இரட்சிப்பிற்காக மாதந்தோறும் மிஷனெரி காணிக்கைகள் சேகரித்து அனுப்பிவருகிறார்கள்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 15

**பதில் எழுதுக :**

1. சங்கீதக்காரன் யார் மேல் பொறாமை கொண்டான்?
2. புது திராட்சரசம் யாரை வளர்க்கும்?
3. சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்த – வருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினது யார்?
4. இரட்டுப்புடவையைப் பாறையின் மேல் விரித்தவள் யார்?
5. "யேகோவா என்பது அவருடைய நாம சங்கீர்த்தனம்" வாசிப்பது எங்கே?
6. பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம் யார்?
7. நகைப்பைப் பார்க்கிலும் எது நலம்?
8. சகல ஜனங்களாலும் கனம் பெற்ற நியாய சாஸ்திரி யார்?
9. யார் நல்ல வேலையை விரும்புகிறான்?
10. எது நிறைந்த நீதியோடே புரண்டு வரும்

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **18.06.2014**

**கடந்த மாத போட்டிக்கான சரியான விடைகள் :**

1. 13 வருஷங்கள். – 1 இரா. 7 : 1
2. மெல்கிசேதேக்கு. – ஆதி. 14 : 18,19
3. ஏனோக்கு. யூதா 14
4. உத்தமன் 2 கொரி. 10 : 18
5. கறுப்பு. உன் 1 : 5
6. முட்டையின் வெள்ளைக் கவருவில். யோபு 6 : 6
7. கர்த்தரின் வசனம். சங். 119 : 49, 50
8. மின்னலைப் போல. சகரியா 9 : 14
9. எலியா தீர்க்கதரிசியை. மல். 4 : 5
10. அக்கினி மதிலாக. சகரியா 2 : 5

**கடந்த மாத வேத வினாப் போட்டி 14 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 10 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. சொர்ணமணி தாமஸ், தூத்துக்குடி. 2. Sis. கரோலின் ஜெயசிங், சென்னை. 3. Sis. இந்திரா மோகன், ஆறுமுகநேரி.**

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் அதன் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ **www.shalommission.in** என்ற இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகளில் எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

AXIS BANK — **A/c. No. : 105010100094373 (IFS Code : UTIB0000105)**

ICICI Bank — **A/C. No. 613901112799 (IFS Code : ICIC0006139)**

*குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப,*

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

**Axis** வங்கிக் கணக்கு எண் : **105010100096779 - Tuticorin Branch**

**TMB** வங்கிக் கணக்கு எண் : **174100710400061 - Tiruchendur Road Branch - Tuticorin**

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்

கடந்த மாதம் ஆப்கானிஸ்தானில் வடகிழக்குப் பிராந்தியத்தில் பின் தங்கிய பதாக்ஷான் மாகாணத்தில் பெய்த கடுமையான பருவ மழையில் மலைப்பாங்கான பகுதியொன்று கிராம் ஒன்றின் மீது சரிந்தது. இந்த மண்சரிவினால் சுமார் இரண்டாயிரம் மக்கள் வரை உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாக உள்ளூர் அதிகாரிகள் கூறுகின்றனர். 10 அடி ஆழத்திற்கு சேற்றுமண் கிராமத்தை மூடியுள்ளது.

---

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் மாம்பழங்களுக்கும், நீலக்கத்திரிக்காய், பாகற்காய், புடலங்காய், சேப்பங்கிழங்கு ஆகிய காய்கறிகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் ஒன்றரை ஆண்டுகாலம் இறக்குமதி தடை விதித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள பழ ஈக்கள் மற்றும் பூச்சிகள் இந்த பழங்களிலும் காய்கறிகளிலும் அதிக அளவில் தென்பட்டதால் இந்த முடிவை எடுத்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய ஆணையம் அறிவித்துள்ளது.

---

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் கடந்த 01.05.2014 அன்று நின்று கொண்டிருந்த கவுகாத்தி – பெங்களூரு ரயிலின் இரண்டு பெட்டிகளில் குண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன. இதில் ஒரு பெண் பலியானார். பதினான்கு பேர் காயமடைந்தனர். அதிகாலையில் நேரம், ஐந்து மணி நாற்பது நிமிடத்தில் வர வேண்டிய ரயில் தாமதமாக வந்ததாலேயே வெடி குண்டு சென்னையில் வெடித்ததாகவும் இல்லாவிட்டால் ஆந்திர எல்லையில் வெடித்திருக்கலாம் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

யானைகள், ஒட்டகச் சிவிங்கிகள் போன்ற பெரிய விலங்கினங்களின் எண்ணிக்கை குறைவதால் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு தொற்று நோய்கள் வருவதென்பது உலகெங்கிலுமே அதிகரித்துள்ளது. உயிரினக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் இந்த போக்குக்கு காரணமாக இருக்கலாம் என புதிய ஆய்வு ஒன்று அறிவிக்கின்றது.

நன்றி : www.bbc.co.uk/tamil


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**



ஷாலோம் கிராம ஆலயம்

# படுவேல்

## இராஜஸ்தான்

படுவேல் என்ற கிராமம் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டம் குசல்கட் தாலுகாவில் அமைந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள மக்கள் மிகவும் வறுமையிலும், பாவத்திலும், வாழ்பவர்கள். மேலும் விக்கிரக ஆராதனை செய்யும் பழக்கமுடையவர்கள். ஊழியர் ஜெஸ்வந்த் குமார் என்பவருடைய தாயார் தித்து பேன் இரத்தப் போக்கு வியாதியினிமித்தம், கை, கால்களில் இரத்தம் இல்லாமல் வீங்கிப் போய் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அவர்களை மந்திரவாதிகளிடம் கூட்டிச் சென்று மந்திரம் செய்தும், மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. பின்பு கும்புரா கிராமத்தைச் சேர்ந்த ஷாலோம் ஊழியர் பாதாஜி கராசியா படுவேல் கிராமத்திற்கு சுவிசேஷம் அறிவிக்கும்படியாக வந்தார். இயேசுவைப் பற்றிக் கூறி, வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தார். அப்போது ஜெஸ்வந்த் பாயின் தாயாருக்காகவும் ஜெபித்தபோது தேவன் அவருக்கு நல்ல சுகத்தைக் கொடுத்து மீண்டும் ஒரு ஆண் குழந்தையையும் கொடுத்து ஆசீர்வதித்தார்.

இதினிமித்தமாக இவர்கள் குடும்பமாய் ஆண்டவரை ஏற்று, ஆராதித்து வந்தார்கள். இவருடைய கிராமத்தில் 1996 ஆம் வருடம் தாணுபாய் பார்கி என்பவரின் வீட்டில் ஷாலோம் ஊழியர் பாதாஜி கும்புரா கிராமத்திலிருந்து வந்து வாரந்தோறும் கூட்டம் நடத்தி வந்தார். ஆரம்பத்தில் படுவேல் கிராமத்தில் ஆராதனை நடத்துவதற்கு மிகவும் அதிகமாக எதிர்ப்பு இருந்தது. கிராம மக்கள் ஆராதனை நடத்துவதை தடை செய்தார்கள். ஆனாலும் சோர்ந்து போகாமல், விசுவாசத்தைத் தளரவிடாமல் ஜெபத்துடன் சபையை ஆரம்பித்தார். அதன் பின் எதிர்ப்புகள் மாறி சபையும் வளர ஆரம்பித்தது. பின்பு ஜெஸ்வந்த் பாய் 2009 ஆம் வருடத்தில் தேவன் தன்னை ஊழியத்திற்கு அழைக்கவே, தன் சொந்தக் கிராமத்தில் ஊழியம் செய்யும்படியாக தன்னை அர்ப்பணித்து, ஊழியர் பாதாஜியிடம் இதைக் குறித்து பகிர்ந்து கொண்ட போது, பாதாஜி இவரை உற்சாகப்படுத்தி, ஷாலோம் ஊழியத்தில் 1 மாத வேதாகம பயிற்சிப் பெறும்படியாக அனுப்பி வைத்தார். பயிற்சிப் பெற்று தொடர்ந்து ஜெஸ்வந்த் பாய் படுவேல் கிராம சபையை நடத்த ஆரம்பித்தார். தற்போது சபையில் 22 குடும்பங்கள் தேவனை ஆராதித்து வருகிறார்கள். இந்த சபையின் மூப்பர் கேளா பாய் ஆலயம் கட்டுவதற்காகக் காணிக்கையாக கொடுத்த தன்னுடைய சொந்த நிலத்தில் தேவ நாமம் மகிமைக்காக 22–03–2014 அன்று ஆலயம் கட்டப்பட்டு, சகோ. ஜெயச்சந்திரன் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்தக் கிராம ஆலயம் குளத்துக்குடியிருப்பு, **CSI தூய யோவான் ஸ்நானகன் ஆலயத்தின்** மூலம் **சகோ. ஸ்டீபன்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவி மூலம் கட்டப்பட்டதாகும். தேவனுக்கே மகிமை!

**ரூ. 2 இலட்சங்கள் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2014 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

# ஷாலோம் செயற்குழு கூட்டம் – 25.04.2014



ஆரம்ப ஜெபவேளை



வரவேற்புரை



செய்தி & எதிர்கால திட்ட பகிர்வு – பிஷப். தேவதாஸ் அவர்கள்



ஆலோசனை வேளை



ஆலோசனை வேளை



குழு கலந்தாய்வு வேளை

# ஷாலோம் சேரிட்டி செயற்குழு கூட்டம் – 26.04.2014



ஜெபவேளை



ஆலோசனை வேளை